செய்தி வெளியீடு எண்: 899 நாள்: 02.07.2024

# செய்தி வெளியீடு

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட "அ" பிரிவு அலுவலர்களுக்கான தேர்வில் கலந்துகொண்டு தேர்ச்சிபெற்று புதிதாக அரசுப் பணியில் நியமனம் செய்யப்பட்ட 88 அலுவலர்களுக்கான பொதுவான அடிப்படைப் பயிற்சி அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் 1.7.2024 அன்று காலை 9.30 மணியளவில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கியது

இப்பயிற்சியினை தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள் குத்து விளக்கேற்றி துவக்கிவைத்தார்கள். கூடுதல் தலைமைச் செயலாளர்/இயக்குநர், அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி மற்றும் பயிற்சித் துறைத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 88 "அ" பிரிவு அலுவலர்கள் கலந்துகொண்டனர். விழாவில் தமிழ்நாடு அரசின் மனித வள மேலாண்மைத்துறை செயலாளர் மற்றும் நிதித் ( செலவினங்கள்) துறை செயலாளர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி கூடுதல் இயக்குநர் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். கூடுதல் தலைமைச் செயலாளர்/இயக்குநர், அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி மற்றும் பயிற்சித் துறைத் தலைவர் அவர்கள் மற்றும் தலைமைச் செயலாளர் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி நிர்வாக அலுவலர் அவர்கள் நன்றி நவிலலுடன் துவக்க விழா இனிதே நிறைவுற்று, பொது அடிப்படைப் பயிற்சி துவங்கப்பட்டது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu